# ஆத்மஜோதி



ஸ்ரீ சத்திய ஸாயி பாபா



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

| ஜோதி 17 | ஃ விசுவாவசு ஹூ வைகாசி மீ 1உ [14-5-65] | சுடர் 7 |

## பொருளடக்கம்


1. என்னென்று புகல்வேன்? 19
2. அருளமுதம் 19
3. அறிமுகம் 1
4. ஸ்ரீசத்திய ஸாயி பாபா 1
5. பிரசாந்தி நிலயம் 2
6. இழிந்த வாழ்வை உதறி நடக்கிறேன்! 2
7. அருள் வாக்கு
8. ஆசிரியரின் நேர்மை 2
9. ஓ மனிதா, உன்தெய்வத்தைப் பார்! 21
10. சத்குருவே சர்வேசுவரன்
11. இறை நாமமே இன்பம் தரும்
12. சித்த மருத்துவம்


~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~

## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00

தனிப்பிரதி — சதம் 30

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா

...ஜோதி நிலயம்'' நாவலப்பிட்டி. [இ...

...தொலைபே... 353

# என்னென்று புகல்வேன் !

(வைத்தியநாதஸ்வாமி)

பல்லவி

என்னென்று புகலுவேன் பாபா
உன்தன் தரிசனம் காணக் கண்
கோடியே வேண்டுமே (என்)

சரணங்கள்

1 கருணு மூர்த்தியே சாயி உந்தன்
சரணர விந்தத்தை நான் மறவேன். (என்)

2 நூலணி வித்திரே பாலகர்க்கு அந்த
மேடையைக் காணக் கண்கோடி வேண்டும். (என்)

3 சீரடி நாதனின் சிலே மீதிலே
திருநீற்றைத் தன் கரத்தாலே
பொழிந்து மகிழ்ந்தீர் (என்)

4 சிவராத்திரி யன்று இரவு தன்னில்
உடல் சிலிர்க்கவே ஜோதிமயலிங்கம் எடுத்தீர் (என்)

# சகலமும் நீயே சாயி ராமா

(க. கதிர்காமன்)

1 உலகத்தின் ஒளியே சாயிராமா
உயிரின் தலேவனே சாயிராமா
உணவின் சத்தே சாயிராமா
உண்மையின் வித்தே சாயிராமா – உலகத்தின் ஒளியே

2 கடலின் முத்தே சாயிராமா
கருத்தின் சிறப்பே சாயிராமா
கருணேயின் பெருமையே சாயிராமா
கலியுகத் தெய்வமே சாயிராமா -உலகத்தின் ஒளியே

3 அன்பின் கரமே சாயிராமா
பண்பின் சிகரமே சாயிராமா
சாந்தியின் உருவமே சாயிராமா
சகலமும் நீயே சாயிராமா - உலகத்தின் ஒளியே

# அருளமுதம்

பக்திக்குச் சாதிபாகுபாடு கிடையாது. அது யாவரையும் காப்பது, எல்லோரையும் உயர்த்துவது, வேதத்தில் சாதிகளால் உயர்வு, தாழ்வு, கூறப்படவில்லை. சர்க்கரைப் பொம்மை முழுவதும் சர்க்கரை யாலானதுதான். நான்கு சாதிகளும் பகவானுடைய நான்கு உறுப்புக்களிலிருந்து பிறந்ததாக புருஷசூக்தம் கூறுகிறது. அதன் பொருள் இதுதான். எல்லோரும் சமமான பிறவியை உடையவர்கள். ஆகவே சமமான முக்கியத்துவம் உடையவர்கள். முகம் நடக்குமா? கால்தான் பேசுமா? எல்லோருமே கேட்டு அதன்படி நடப்பது பிரபுவின் குரலைத்தானே? நம்மைக் காப்பாற்றுவதும், அவரது கைதான். ஆகவே யுத்தம் செய்வது தமது தார்மீகக் கடமை என உணர்ந்து அதன்படியே செயலாற்றுபவர் யாவரும் க்ஷத்திரியர்கள். வேத சாஸ்திரங்களை ஓதி உணர்வது தமது கடமையென உணர்பவர் யாவரும் பிராமணர்கள். இவையாவருக்கும் உண்டான தனி உரிமையல்ல.

+ + +

தெய்வீகத் திருநாமம் நம்மைக் காப்பாற்றி முத்தியினையும் அளிக்கும். கர்வத்தாலும், தானே தன்னைத் தாழ்வாக நினைத்து அனுதாபப் படுவதாலும் உண்டான தாக்குதல்களிலிருந்து நம்மைக்காக்கும் உறுதியான கவசம். அது இந்தத் திருநாமம் சித்திரிக்கும் உருவத்தை அகக்கண்ணிற்கு இலக்காக்கிக் கொண்டு ஒழுங்கான முறையில் ஜெபம் ஆரம்பிக்கப் பட்டதும் பல தடங்கல்களும் மன அமைதியை அழிக்கவல்ல கெட்ட எண்ணங்களும் ஆசைகாட்டி மோசம் செய்யும் சம்பவங்களும் தோன்றக்கூடும். ஆனால் அவைகளை அலட்சியம் செய்ய வேண்டும். அதனைக்கவனியாது முன்னேற வேண்டும். அவற்றைப் பெரிதாக மதிக்கக் கூடாது. உங்களது நற்பழக்கங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள். ஒழுங்கு முறையை ஸ்திரப் படுத்திக்கொண்டுஅதனை மீறாமல் இருங்கள். உங்கள் அகஆட்சியை வளர்த்து வாருங்கள். நல்லோருடனும் தெய்வத்தன்மை வாய்ந்தவருடனும் அதிகமாகப் பழகிவாருங்கள்.

— பகவான் ஸ்ரீ சத்தியபாபாஜி.

# அறிமுகம்

(ஆசிரியர்)

இன்றைக்குப் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு சுவாமி இராமதாசரும் அன்னை கிருஷ்ணபாயும் இலங்கைக்குச் சமுகம் அளித்தனர். நாவலப்பிட்டிக்கு அவர்கள் சமுகம் அளித்த போது ஒருநாள் அதிகாலை 7 மணிக்குச் சுவாமிகளுக்கு ஆத்மஜோதி நிலையத்தில் பாத பூஜை நடைபெற்றது. சுவாமிகளுக்குப் பாத பூஜை நடைபெறுவதற்கு முன்பே ஒரு அமெரிக்க மாது வந்து சேர்ந்தார். அவர் யார் என்று யாரும் கேட்டாரில்லை. பாத பூஜை முடியும் வரை சுவாமிகள் முன்னிலையில் வச்சிராசனத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். சுவாமிகள் புறப்பட்ட போது அடியார் கூட்டத்துடன் தாமும் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

இன்றைக்கு நாலு மாதங்களுக்கு முன்பு நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கத்தினர் செல்வி கில்டா சாள்ஸ்டன் என்னும் பெயருடைய ஒருவரைப் பேச்சுக்கு அழைத்திருந்தனர். அவருடைய பேச்சு ஆரம்பமாவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்பு ஒரு அறையில் தியானத்தில் அமர்ந்து விட்டு நேராக மேடைக்கு வந்தார்கள். முகத்தை எங்கோ பார்த்ததாக நினைவு. வெகு நேரத்திற்குப் பின்புதான் அன்று சுவாமி ராமதாசரைத் தரிசிக்க வந்த அந்த அம்மையாரே இந்த மாதாஜி என அறிய முடிந்தது. நாமபஜனை செய்யும்போது அவருடைய உள்ளத்திலே எழும் ஆனந்தத்தை அவருடைய முகத்திலே அனுபவிக்க முடிந்தது. கை தாளம் போட்டு அவர் நாம பஜனை செய்த போது சபையிலுள்ளோர் அத்தனை பேரும் தம்மை அறியாமலே ஆடிப்பாடத் தொடங்கினர்.

இது ஒருபுறம் இருக்க அவருடைய பேச்சிலே பாரதத்திலே தோன்றிய மகான்களைப் பற்றிப் பொதுவாகவும் தமதுகுருநாதராகியசாயிசத்தியபாபாஜியைப்பற்றிச்சிறப்பாகவும் குறிப்பிட்டார்கள். அவருடையஅற்புதங்களைக்கேட்ட சபையினர் சாயி சத்திய பாபாஜீயை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டுமென்று ஆசை கொண்டனர். சபையின

ரின் ஆசை வீண் போகவில்லை. மாதாஜி உடனே தம்மி டமிருந்த நூற்றுக் கணக்கான படங்களை எடுத்துச் சபை யினருக்குக் காட்டினார்கள். தாம் சுவாமிகளிடம் ஒரு படம் கேட்டதாகவும் அவர் உடனே கையை நீட்டி நூற்றொரு படங்களை வரவழைத்துக் கொடுத்ததாகவும் தாம் அப்ப டங்களில் ஒன்றையாவது யாருக்கும் கொடுக்க முடியா தென்றும் சொன்னார்கள். சுவாமிகளுடைய ஞாபகார்த்த மாக தமக்குச் சிறிது விபூதி தருமாறு கேட்டாராம். கை யினை நீட்டி அழகான கிண்ணம் நிறைய வாசனை பொருந் திய விபூதி வரவழைத்துக் கொடுத்தார். அதனையும்காட்டி அவ் விபூதி தான் மாத்திரமே உபயோகிப்பது என்றும் எடுக்க எடுக்கக் குறைவடையாதது என்றும் குறிப்பிட் டார்கள். அம்மையார் கழுத்திலணிந்த உருத்திராக்க மாலை யும் சுவாமிகளால் வரவழைத்துக் கொடுக்கப்பட்டதாகும். அம்மையார், தமது குருநாதர் ஏழு வயது தொடங்கியே தம்மை யறியாமலே இப்படி ஆயிரக் கணக்கான சித்துக ளைச் செய்துள்ளார் என்றும் அவர் பிறக்கும் போதே சித் துடன் பிறந்தவர் என்றும் குறிப்பிட்டார்கள். அவர் நிகழ்த்தும் சித்துக்கள் அவரையும் அறியாமலே நிகழ்வன என்றும் குறிப்பிட்டார்கள். அத்தகைய குருமகராஜ் சாயி சத்திய பாபாஜி அவர்களுடைய திருமுகப் பொலிவே இம் மாத ஜோதியை அலங்கரிக்கின்றது.

சாயி சத்திய பாபாஜீயை எமக்கு அறிமுகஞ் செய்து வைத்த மாதாஜீயிடம் உங்கள் பிறப்பு வளர்ப்பைக் கூற வேண்டும் எனக்கேட்டேன். அதற்குஅவர் நான் எப்போதும் பிறந்ததும் இல்லை; இறக்கப் போவதும் இல்லை என்று கூறினார்கள். தந்தையார் இலண்டனிலுள்ள ஏணிஸ்ற் என்பவராகும். தாயாரின் பெயர் எலைஸ். மாதாஜீயின் ஆரம்ப வாழ்வு கலிபோர்ணியாவில் ஆரம்பித்தது. சிறிய வயதிலேயே ஆத்மீகத்தில் நாட்டம் இருந்தது. இதனைத் தான் விட்ட குறை தொட்ட குறை என்பார்கள். சிறிய வயதிலேயே தந்தையிடம் ஒருநாள் தான் என்ன சமயம் என்று கேட்டார்கள். அதற்குத் தந்தையார் பிறர்க்கு நன்மை செய்தல் தான் உனது சமயம் என்றார்கள். பாட சாலையில் உபாத்தியாயர் நீ என்ன சமயம் என்று கேட் டார். அதற்கு நான் நாளைக்கு அப்பாவிடம் கேட்டு வரு கிறேன் என்று சொல்லி தந்தையிடம் கேட்டபோதுதான் தந்தையார் மேற்குறிப்பிட்ட மறுமொழியைக் கூறினர்.

கலிபோர்ணியாவில் படித்துக் கொண்டிருக்கும் போதே முதன்முதல் அங்கே சுவாமி யோகானந்தாவைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சுவாமி யோகானந்தாவைத் தரிசித்த படியினுல் கிரியா யோகத்தில் சில நாட்கள் ஈடுபட்டிருந்தார்கள். சத்திய சாயி பாபாவுடன் தொடர்பு தெய்வாதீனமாகக் கிடைத்தது. இந்தியாவில் சோதிடர் ஒருவரிடம் ஏடு வாசிக்கும் போது இவரது சாதனைக்குரிய மந்திரம் அதிலேயே எழுதப்பட்டிருந்தது. மந்திர ஜெபத்திலும் சாதனையிலும் ஈடுபட்டிருந்த காலத்தில் எல்லாத் தெய்வமும் வந்து தோற்றுவதைக் கண்டார். எல்லாவற்றையும் ஒளி மயமாகக் கண்டார்.

இங்ஙனம் சாதனையில் சித்தியடைந்த அம்மையார் அவர்கள் தற்போது இந்தியாவில் சுவாமி சாயி சத்திய பாபாஜியுடனேயே இருக்கிருர்கள். சுவாமிகளை இலங்கைக்கு அழைத்து வரும் நோக்கமாகவே சென்றுள்ளார்கள். சுவாமிகள் இலங்கைக்கு வந்தால் இலங்கை வாழ் மக்கள் யாவரும் பெருந்தவம் செய்தவர்களாவோம்.

---

பிறரால் சிருஷ்டிக்கப்படாமல் தானே உளதாயும் சர்வமும் அறிந்ததாயுமுள்ள ஜீவசக்தி ஒன்று மனிதன் அறிந்தசகல சக்திகளிலும்வியாபகமாய் இருக்கின்றது. இந்தச் சக்திகளெல்லாம் அழிந்து போனுலும அது அழியாமல் நிற்கும். அதுவே கடவுள். அத்தகைய கடவுளை மனப்பூர்வமாக நம்புகிறவரே உண்மையாகவும் அஹிம்சையாகவும் நடக்க முடியும.

கடவுள் என்னும் ஜீவசக்தியையே நான் நம்பியிருப்பதால் சந்தர்ப்பம் வரும்பொழுது எனக்கு நிச்சயம் வழிகாட்டுவார். ஒரு நிமிஷங் கூட முன் கூட்டிக் காட்டமாட்டார்.

கடவுள் என்னும் சக்தி வர்ணனைக்குள் அடங்காத ஒன்ருகும். மனிதன் வர்ணிக்க வேண்டிய அவசியமும் அதற்குக் கிடையாது.

— காந்தி.

# ஸ்ரீ சத்திய ஸாயி பாபா

தென் இந்தியாவில், தர்மவரம், பேனு கொந்த ஆகிய புகையிரத நிலையங்களிலிருந்து 20 மைல்களுக்கு அப்பால், சித்திராவதி நதிக் கரையில் இருப்பது புட்டபர்தி கிராமம். பல வருஷங்களுக்கு முன் வேங்க அவதூதர் எனும் பெரிய மகான் ஒருவர் அவ்வூரில் வசித்துவந்தார். அவர் சந்ததியில் வேங்கப்ப இராசு எனும் பக்தர் ஒருவர் இருந்தார். இவர் ஏழைகளின் நண்பனுகவும், தன்னை ஒறுத்து மற்றவர்களுக்கு உதவி புரிபவராகவும் திகழ்ந்தார். இவர் மனைவியார் ஈஸ்வரம்பா. அம்மையாரின் பெற்றூர் பிள்ளையில்லாத காரண மாக ஈஸ்வரன் கோயில் ஒன்று கட்டியபின் பிறந்த குழந்தை யாதலால் ஈஸ்வரம்பா எனும் நாமம் சூட்டப்பட்டது. வேங் கப்பருக்கும் ஈஸ்வரம்பாவுக்கும் நாலாவது குழந்தையாக ஒரு ஆண் குழந்தை 23-11-1926 அன்று தோற்றியது. சத்திய நாராயண இராசு என்று பெயரிட்டார்கள்.

சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதே அவரின் செயல்கள் நவீனமாகவும் அற்புதமானவையுமாக இருந்தன. ஏழைகள் பிச்சைக்காரரைக் கண்டால் வாசலுக்கு அழைத்து அவர் களுக்குத் தானதருமம் கொடுக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்வார்.

விளையாட்டுத் தோழர்களை ஒன்று கூட்டி வீதிதோறும் சென்று கோபாலனைப் பற்றிப் பாடுவார். பாடசாலை இடை வேளைகளில் பூசைகள் செய்வதாகப் பாவனை செய்வார். கையை வானத்தில்நீட்டி இனிப்புவகைகள் பெற்றுத் தோழர் களுக்குப் பிரசாதமாகக் கொடுப்பார். பள்ளிக்கூடத்திலேயே இவரை ''குரு'' ''பிரம்மஞானி'' என்றெல்லாம் பிள்ளைகள் அழைப்பார்கள்.

இவரின் அண்ணர் ஒருவர் ஊர்வகொந்த உயர்தரப் பள்ளியில் தெலுங்கு பண்டிதராகக் கடமையாற்றி வந்தார். தம்பியாருக்கும் மேற்படிப்பு வசதிகள் கொடுக்க விரும்பித் தனது பள்ளியில் சேரவைத்தார். பாடசாலையில் பல துறை களிலும் திறமைசாலியாகத் திகழ்ந்தார் நம் சத்திய நாராய ணன். 14வயது நடந்து கொண்டிருந்த காலம் துங்க பத்திரா நதிக்கரையில் ஹம்பி என்னும் இடத்தில் உள்ள விருபாஷக்

கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து திரும்பிய இவர் வீடு சேர்ந்ததும், புத்தகங்களை வீசி எறிந்து விட்டுத் தன் அண்ணனைப் பார்த்து பின்வருமாறு கூறினர்.

''நான் உங்களுக்குச் சேர்ந்தவன் அல்லன். எனக்குரிய தொழில் ஒன்று இருக்கு. என் பக்தர்கள் என்னை அழைக்கிருர்கள்''

அவரிடம் மேலும் வினவிய பொழுது, தான் 'ஷிர்டி'யிலிருந்த ஸாயி பாபாவின் *(Sai Baba of Shirdi)* மறு பிறப்பு என்றும், சமாதியாகி எட்டு வருஷங்களின்பின் தான் திரும்பவும் வருவேன் என்று கூறிய உறுதிமொழிக் கிணங்க இப்போ தோற்றியுள்ளதாகவும், தன் மூதாதையராகிய வேங்க அவதூதரின் தவப்பயனுகத்தான் தோன்றியதாகவும் கூறினர். அந் நாட்களில் அந்தப் பகுதியில் உள்ளவர் எவரும் ஸாயி பாபாவைப் பற்றி அறிந்திலர். அதனுல் நாரர்யணனுக்குச் சித்த சுவாதீனம் ஏற்பட்டிருப்பதாகக் கருதிச் சிகிச்சை செய்ய முற்பட்டனர். எவ்வித வைத்தியமும் பலன் கொடுத்திலது. 'ஷிர்டி'யில் ஸாயி பாபா அவர்கள் வசித்த இடம், ஆங்குள்ள ஆலமரம், அங்கே நீரினுல் ஏற்றப்பட்ட தீபங்கள், அங்கே சென்ற பக்தர்கள் பற்றிய விபரம் எல்லாம் கூறத் தலைப்பட்டார்கள். அங்கே ஷிர்டியில் சென்று தரிசித்த சில பக்தரையும் அடையாளம் கண்டு கூறினுர்கள். சத்திய நாராயணனின் நிலையை உற்ருரும் மற்றவரும் உணரத் தொடங்னர். சத்திய ஸாயி பாபா என்று அழைக்கத் தொடங்கினர். வெறும் கையிலிருந்து விபூதி எடுத்து பக்தர்களுக்கு வழங்கினுர்.

சுவாமிகள் அன்பரை ஆட்கொள்ளும் விதம் பல. புத்தகங்கள் மூலம், படித்தவருக்கும், படத்தை மட்டும் பார்த்தவருக்கும், ஒருமுறை மட்டும் கேள்விப் பட்டவருக்கும் கூட கனவிலும் நேரிலும் காட்சி கொடுத்தும், விபூதி கொடுத்தும் கடாட்சித்துள்ளார்கள். மகிமைகள், அற்புதங்கள், மூலமாகவும் உபதேசங்கள் மூலமாகவும் பலருக்கு உதவியுள்ளார்கள். ஆத்மீக சாதனையில் முன்னேறுவதற்கு சுவாமிகள் கூறும் உபாயம் சத்சங்கம், நல்லுபதேசம், தன்னைத்தான் ஆராய்தல் சேவை செய்தல் முதலாயினவே. சரணுகதி பாவனை ஒன்றே மனிதரை ஈடேறச் செய்யும் என்றும் அப்பாவனை பெறுதற்குச் சிறந்தவழி இடையரு நாமஜெபம் ஒன்றுதான் என்றும்

கூறுகிறார்கள் சுவாமிகள். உருவத்திலும் நாமத்திலும் மனம் லயப்பட்டு, இவையிரண்டையும் விட்டு, மனம் விலகாதிருக்கப்பழக வேண்டும்; இதனை ஜெப சகித தியானம் அல்லது தியான சகித ஜெபம் என்றும் கூறப்படும். இதுவே சுவாமிகள் அடிக்கடி பக்தர்களுக்குக் கூறும் மார்க்கமாகும்.

'தந்தை தாய் பேண், பெரியோரைக் கனம் பண்ணு', நன்றி மறவேல், இரக்கமது கைவிடேல், என்பன போன்ற பல நற்பழக்கங்களை மக்களுக்கு கட்டாயமாகப் புகட்டுகிறார். பிழை செய்யும் எவரையும் மன்னிப்பார்கள். ஆனால் கடினமாகக் கண்டிப்பார்கள். கண்டிப்பதில் தயங்க மாட்டார்கள். பெயரையோ புகழையோ விரும்பாதவராதலின், எவ்வித பாகு பாடுமின்றி எல்லோரையும் சரிசமனாக நடாத்தி வழி காட்டுவார். தன்னிடம் வருபவரின் மனக் கோணங்களில் உள்ளவற்றை எல்லாம், சொல்லாமலே அறிந்து, அவரவர்க்குரிய பரிகாரமும் செய்துவிடுவார். எவ்வளவு தூரத்திலிருந்து கொண்டும் தன் பக்தர்கள் பிழையான வழியில் நடந்து கொண்டால், பின் ஒருவேளையில் அந்த இடம், காலம் நேரம் முதலாய விபரங்களைக் கண்டிப்பதுண்டு. ''இன்ன நாளில் இன்ன நேரத்தில் சிநேகிதரின் தூண்டுதலால் நீர் மதுபானம் அருந்தவில்லையா'' என்று ஒரு பக்தரை ஒருமுறை விசாரித்தார். சுவாமிகளிடம் எதனையும் ஒழிக்க முடியாது. அவருக்கு பக்தர்களின் முற்பிறவித் தொடர்பு, வருங்காலம், இப்போ நிகழ்வது ஆதியனஎல்லாம்உணரும்சத்தியுண்டு. ஷிர்டி ஸாயி பாபா அவர்கள் ''நீ எங்கிருந்தாலும், எதனைச் செய்தாலும் நீசொல்வது செய்வது எல்லாவற்றையும் யான்காண்கிறேன்'' என்று கூறியமை சத்திய ஸாயி பாபா விடத்திலும் காணப்படுகின்றது. ''நானிருக்கப்பயம் ஏன்'' என்பதும் இம்மகான் களிருவரதும் வாக்கியங்களாகும்.

தன்னையடைந்தார் வினை தீர்ப்பதுவே தலையாய கடனாகக் கொண்ட சத்திய ஸாயி பாபா அடியார்களுக்காகச் செய்த அற்புதங்கள் கணக்கில. விஞ்ஞானியரும் வைத்தியரும் இவற்றைக் கண்டு திகைக்கின்றனர். துடை எலும்பு முறிந்ததால் கால் முழுவதையுமே கழற்றி விட வேண்டும் என்ற சிகிச்சையாளரின் கூற்றுக்குப் பயந்து வெளியேறிய நோயாளிக்கு இரவில் காட்சி கொடுத்து விபூதி பூசியும், வாயில் இட்டும், ''பயப்பட வேண்டாம், எல்லாம் சரி''

என்று அபயம் கொடுத்துள்ளார் சுவாமிகள். வேறு சிகிச்சையில்லாமலே கால் மாறிய அந்த அன்பர் சிலகாலத்துக்கு முன் சுவாமிகளின் ''சாந்தி நிலையத்துக்கு'' வந்த பொழுது கண்ணீருடன் இக்கதையைக் கூறினார்கள். அடியார்களின் அல்லல் தீர்ப்பதற்காகச் சுவாமிகள் உடலைவிட்டுத் தூர இடங்களுக்குச் சென்று திரும்பியதும் உண்டு. அந்நேரங்களில் எல்லாம் உடல் உணர்வற்று மரக்கட்டையைப் போலக் கிடக்கும். ரிஷிகேச தெய்வநெறிக் கழகத்தைச் சேர்ந்த சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் கோடைக் கானலில் ஒரு நண்பகல் சத்திய ஸாயி பாபாவுடனிருக்கும் பொழுது, ''சுட வேண்டாம்'' என்று அலறிக் கொண்டு பாபா அவர்கள் கட்டிலில் வீழ்ந்து, பின் சிறிது நேரத்தில் எழுந்து போப்பால் என்ற இடத்தில் உள்ள ஒரு அன்பருக்கு ''கவலை கொள்ள வேண்டாம்துவக்கு என்னிடமிருக்கு'' என்றுதந்தி கொடுப்பித்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து அதே அன்பரிடமிருந்து வந்த கடிதம் படித்த பின்னர்தான் மற்றவர்களுக்கு விபரம்தெரியவந்தது. பாபா அவர்கள் கோடைக் கானலில் ''சுட வேண்டாம்'' என்று கூறிய அதே வேளையில் போப்பால் என்ற இடத்திலிருந்த அந்த அன்பர் சில மனவேதனை காரணமாகச் சுட்டுத் தற்கொலை செய்வதற்காக துவக்கு ஒன்றைத் தயார் செய்திருக்கிறார். தூரத்திலிருக்கும் அன்பர்கள் பலர் தங்கள் வீடுகளிலுள்ள பாபாவின் படங்களிலிருந்து விபூதியும் தீர்த்தமும் பெற்றிருக்கிறார்கள். இவ்வித அற்புதங்கள், மக்கள் துயர் தீர்ப்பதற்காகச் சுவாமிகள் செய்யும் சேவையின் ஒரு அம்சமேயாகும். சுவாமிகளின் வாழ்க்கையில் உள்ள ஏனைய அம்சங்கள், சேவைகள் சிலவற்றையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பள்ளிக்கூடப் படிப்பை விட்ட நாட்களில் பாபா அவர்கள் தன் தமையனுருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் அவர் குறிப்பிட்டதாவது:—

''நான் இந்த உலகத்துக்கு உரியவனல்ல. எனக்கு என்றோர் தனியிடம் இல்லை. எங்கே அன்புடன் நினைக்கின்றார்களோ நான் அங்கேயுள்ளேன். நான் பேசுவதும் செயல்படுவதும் மக்களின் நலனுக்காகவே. **எனது கடமை** எல்லோரையும் ஆபத்திலிருந்து காப்பாற்றி, நல்வழிப்படுத்தி அவர்களுக்கு ஆனந்தம் அளிப்பது. **எனது விரதம்** எல்லோரையும் சன்மார்க்கத்தில் ஒழுகச் செய்தல். **எனது பிரேமை** மக்களின்

துன்பத்தைத் துடைத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.'' சுவாமிகள் வேறொரு சந்தர்ப்பத்தில் கூறியதாவது:—

''சாதுக்களின் வேண்டுகோள் காரணமாகவே நான் தோன்றியுள்ளேன். சாதுக்கள் மக்களுக்கு எப்படிச் சேவை செய்ய வேண்டும், அத்துடன் எவ்வாறு தாங்கள் போய் அடைய வேண்டிய குறிக்கோளையும் (GOAL) நிதானமாக மனத்தில் வைத்திருக்கவேண்டும்என்பதனையும்அவர்களுக்குப் புகட்டவே நான் தோற்றியுள்ளேன்.''

இக் கூற்றுகள் எல்லாம் சுவாமிகளின் வாழ்க்கையில் பரிணமித்துக் கொண்டேயிருக்கின்றன. தன்னையடைந்தவர்களுக்கு வாக்காலும் வாழ்க்கையாலும் வழிகாட்டுவதோடு நின்றுவிடாது புத்தகங்கள், சஞ்சிகைகள் மூலமாகவும் உபதேசம் செய்து கொண்டேயிருக்கிறார்கள்.

சநாதன சாரதி என்னும் மாதாந்த சஞ்சிகை ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் வெளியாகின்றது. இவற்றின் மொழி பெயர்ப்புகள் தமிழிலும், மலையாளத்திலும், கன்னடத்திலும் வெளியிடப்படுகின்றன. தமிழில் வெளிவருவது 'பிரசாந்தி' என்றழைக்கப்படுகின்றது.

சுவாமிகளின் ஆச்சிரமம் அவர்கள் அவதரித்த இடமாகிய புட்டபர்தி என்ற இடத்தில் உள்ளபிரசாந்தி நிலையம் ஆகும். ஆங்கு சிவராத்திரி, நவராத்திரி சுவாமிகளின்ஜெயந்தி ஆகிய மூன்று வைபவங்களும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். நவராத்திரி காலத்தில் விசேஷமான யாகங்களும் வேதபாராயணமும் இடம் பெறும். இந்த யாகங்களின்முடிவில் முறைப்படி பூரண ஆகுதி சொரியப்படும். ''வழமை போல நெய் முதலியனவற்றைச் சொரிந்தால் போதாது. எம் அகங்காரம், போட்டி பொறாமை முதலாய தீயகுணங்களையும் அக்கினிக்கு ஆகுதியாக்க வேண்டும்'' என்று சுவாமிகள் கூறுவார்கள்.

சுவாமிகளின் சொற்பொழிவுகள் எல்லாம் சம்பாஷணைகள் போலவேயமையும். நாளாந்த அனுபவங்களையே உதாரணமாக எடுத்துக் காட்டுவார்கள். கீதை, உபநிஷதங்கள், பிரம்மசூத்திரங்கள், இராமாயணம் முதலியவற்றிலிருந்து

மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவார். இவற்றைப்பற்றித் தக்க பண்டிதர்களைக் கொண்டு சொற்பொழிவுகளும் செய்விக்கப்படும்.

வேதபாராயணம் செய்வித்தலோடு நில்லாதுவேதவிதிப்படி யாகங்கள், உபநயனச் சடங்குகள் முதலியனவும்செய்விப்பார்கள். வேதங்கள் உபதேசிக்கும் கர்ம காண்டத்தை கிரியா முறையில் பயிற்றுவிக்கிறார்கள். சுவாமிகளின் தலைமையில் மக்கள் நிஷ்காமிய கர்ம சேவையிலும் ஈடுபடுகிறார்கள். உபாசன காண்ட முறையை, பஜனை, பிரார்த்தனை கீர்த்தனை, தீர்த்தயாத்திரை, யாகம் முதலாயவற்றால் மக்களை அனுஷ்டிக்கச் செய்கிறார்கள். பக்தியோகம் அத்திவாரமாகவும், கர்மயோகம் அதன்மேல் எழுப்பப்படும் கட்டிடமாகவும், ஞானயோகம் கலசம் அல்லது முடி ஆகும் என்பதே சுவாமிகளின் முடிவு. ஆதலில் சுவாமிகள் இம்மூன்று துறையிலும் மக்களைப் பழக்கி வாழ்வின் பலனைஅடைவிக்கிறார்கள்.

வேதசாஸ்த்திரங்களை முறையே பரப்புதற்காக,நெறிதவறாத ஒழுக்க சீலர்களான வேதவிற்பனர்கள் கொண்ட ''வித்வான் மகா சபா'' என்னும் சபையொன்றை ஸ்ரீ ராம நவமி தினம் ஒன்றில் சுவாமிகள் ஏற்படுத்தினார்கள். கேரளம், உத்திரப்பிரதேசம், ஆகிய இடங்களில் கவர்ணராகக் கடமையாற்றிய டாக்டர். பி. இராமக்கிருஷ்ணராவ் அவர்களே இச்சபையின் தலைவராவர். ஆந்திரதேசத்திலும், பங்களூரிலும் வேறு பல இடங்களிலும் இச்சபையினர் மகாநாடுகள் நடாத்தியுள்ளனர், 1964ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சென்னையிலும் மகாநாடு நடைபெற்றது. மந்திரி பக்தவத்சலம் அவர்கள் மகாநாட்டைத் தொடக்கி வைத்தார்கள்.

அன்பர்கள் தன்னிடம் எதனையும் கேட்டுப்பெறலாம் என்பதை வற்புறுத்துமுகமாக சுவாமியவர்கள் ''குழந்தை ஒன்று தன் தாயினிடம் எதனையும் பெறுதற்கு உபசாரவார்த்தைகளோ, புகழ்ச்சி உரையையோ, காலநேரத்தையோகருத வேண்டியதில்லை. தன் தாயிடம் எதனையும் பெறும் உரிமை குழந்தைக்கு உண்டு'' என்று கூறுவார்கள். ஸாயி பாபா என்னும் வாக்கியத்தில்,

ஸ— சர்வேஸ்வரன், சர்வவல்லபன் (சர்வ சக்த)

ஆயி— தாய், மாயி என்பதையும்

பாபா— தகப்பன், தலைவன், குரு.
ஆகியவற்றைக் குறிப்பனவாகும்.

ஆதலின் ஸாயி பாபா என்பது மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் நால்வரையும் குறிப்பதாகும். நால்வருமாக எம்முன் திருவவதாரம் செய்திருக்கும் இந்த மகா புருஷரை நாமும் விரும்பிய ஒருமுறையில் வணங்கி, சிந்தித்து அவரின் ஆசீர்வாதத்துக்கு ஆளாகிப் பேரின்பம் எய்துவோமாக.

## குறிப்பு:

**திரு. சத்தியதாசன் அவர்கள் எழுதிய ஆங்கில நூல் ஒன்றில் உள்ள வரலாறுகள் சிலவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது இக் கட்டுரை.**

---

# பிரசாந்தி நிலையம்

(தொண்டன்)

பூரண சாந்தியை ஒருவருக்குக் கொடுக்கக் கூடியனவாக இந்தியாவில் உள்ள ஸ்தாபனங்களில் ஒன்று பிரசாந்தி நிலையம் என்று கூறின் மிகையாகாது. அங்கே போகிறவர்கள் பூரண சாந்தியைப் பெறக் கூடியதாக இருப்பதுமல்லாது தம் வாழ்வுடன் சாந்தியை நிரந்தரமாக இணைத்துக் கொள்ளும் வழிவகைகளையும் கற்றுக்கொள்ள முடியும். மனிதனின் மூன்று குணங்களையும் குறிப்பன போன்று ஒன்றன் பின் ஒன்ருக மூன்று படலைகள் உண்டு. கடைசிப் படலையைக் கடந்ததும் வட்ட வடிவமாகப் பரப்பப்பட்ட மணல் உண்டு. இது காமத்தைக் குறிக்கிறது. அதற்கு அடுத்து குரோதத்தைக் குறிக்கும் சிறு புதர்கள் உண்டு. அப்பால் உள்ளது செந்நிறப் படிகள். இவை துவேஷத்தைக் குறிக்கின்றன. இப்படிகள் எம்மை, பிரேமையைக்குறிக்கும்பரந்தபச்சை நிறமுற்றத்துக்குஇட்டுச் செல்கின்றன. சாதகருக்கு அக இருளகற்றிப் பேருண்மையை விளக்குவது போன்று அமைந்த ஞான ஜோதியான

தீபம் இருதயகமலம் அளவு உயரத்தில் அவ்விடமத்தியில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

இத்தகைய நிலையம் இருப்பது பங்களூர்—குன்தக்கர்புகையிரதப் பாதையில் உள்ள தர்மவரம் நிலையத்துக்கு அப்பால் சுமார் 20மைல் தூரத்தில். இப்புகையிரத நிலையத்தில் போய் இறங்கினுல் ''ஸாய் பாபாவைப் பார்க்கப் போகிறீர்களா?'' என்று தான் காண்போர் எவரும் கேட்பார்கள்.

சத்திய ஸாய் பாபா அவர்களை ஆதரித்து அன்புடன் உணவு கொடுத்து வந்த அம்மையார் சுப்பம்மா எனும் ஒரு கிழப் பிராமண விதவை. பஜனை செய்வதற்காக ஒரு கொட்டில் அமைக்கப்பட்டிருந்தது. பஜனைக்கு வரும் கூட்டம் அதிகரித்து வந்தது. சிறிது சிறிதாக கட்டிடம் பெருப்பிக்கப்பட்டு 1950ம் ஆண்டில் திறக்கப்பட்டது தான் நாம் மேற்கூறிய பிரசாந்தி நிலையம். கட்டிடத்தின் கீழ்மாடியில் ஒரு பிரார்த்தனை மண்டபம் உண்டு. இம் மண்டபத்தில் சகல வித தெய்வ வடிவங்களும் சகல நாட்டிலும் காலத்துக்குக் காலம் தோன்றிய மகான்கள், சாதுக்கள், சித்தர்கள் முதலாயினோரின் படங்களும் காணலாம்.

நிலையத்துள் செல்பவர்கள் முதலில் கவனிக்க வேண்டிய விதி எவருடனும் இனிமையாகவும்அமைதியாகவும் பேசுதல். இயன்ற வரை சத்தம் செய்யாமல் மெல்லிய குரலிலேயே பேச வேண்டும். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உள்ளிருந்தாலும், நாம் போகும் பொழுது நாம் மட்டுந்தானு இருக்கின்ருேம் என்று சந்தேகம் தோற்றக்கூடிய அளவுக்கு அங்கே அமைதி நிலவும். போகிறவர்கள் எல்லோருக்கும் சுவாமியவர்களைச் சந்தித்துப் பேசச் சந்தர்ப்பம் கொடுக்கப்படும். ஆனுல் சுவாமிகளிடம் போகுமுன் நிலையவாசலில் தொங்கவிடப்பட்டிருக்கும் அறிவித்தலின்படி ஒழுக வேண்டும். சுவாமிகளிடம் போகிறவர்கள் எவ்வித பொருட்களையோ, சம்பிரதாய முறைப்படி பழங்களையோ மலர்களையோ தானும் கொண்டு செல்லக் கூடாது. மற்ருெரு அறிவித்தல் நிலையத்தின் பெயரிலோ சுவாமியின் சார்பிலோ பணம் சேகரிப்பது தடை செய்யப்பட்டுள்ளதென்ற அறிவித்தல். சுவாமிகள் பக்தர்களின் அன்பு ஒன்றையே காணிக்கையாக எதிர்பார்க்கின்ருர்கள். நிலையத்தில் புகைப் பிடித்தலும் தடை செய்யப்பட்டுள்ளது.

நிலையத்தில் தினமும் காலை 4.20லிருந்து 6வரைபிரணவ ஜெபமும் தியானமும், 7லிருந்து 9வரை பஜனையும் மாலை4 லிருந்து 5வரை சத்சம்பாஷணையும், இரவு 7லிருந்து 8வரை பஜனையும் நடைபெறும். இவற்றைத் தவிர்ந்த ஏனைய சேவைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். பிரதானமாக ஏழைகள், நோயாளிகள் சேவை, சிரமதானம்முதலாயினவும் நடந்து கொண்டிருக்கும்.

நிலயத்துக்கு மேலேயுள்ள மலைச் சாரலில் தியான மண்டபம் ஒன்றுண்டு. ஆங்கே இதற்கென நாட்டப்பட்ட ஆல மரமும் மலைக்காட்சிகளும் தியானம் கூடுவதற்கு உகந்த சூழ் நிலையைக் கொடுக்கின்றன. நிலயத்துக்கு அருகில் ஆஸ்பத் திரி ஒன்றும் உண்டு. 12நோயாளிகள் விடுதியாக இருந்து சிகிச்சை பெறக்கூடிய படுக்கை வசதிகளும் ஏனைய நவீன யந்திர வைத்திய வசதிகளும் உண்டு. அயற் கிராமங்களிலிருந்து பல மக்கள் வந்து சிகிச்சை பெறுவர்.

நிலயத்துள் சென்றதும் அங்கேநிலவும்சாந்தமே எம்மை மௌனம் அனுஷ்டிக்கச் செய்துவிடும். உள்ளத்தில் ஒருவகை ஆனந்தத்தையும் தியானம், ஜெபம் முதலாயவற்றில் ஒரு நாட்டத்தையும் உண்டுபண்ணும். சத்திய ஸாய் பாபா அவர்களின் அன்பும் அருளும் ஊற்றெடுத்துப் பாய்கின்றது. அவற்றை அள்ளிப் பருகி நாமும் உய்வோமாக.

# கடவுள்

உலகத்தில் சகல சக்திகளிலும் எதுஉயர்ந்ததோ அந்த அழிக்க முடியாத சக்திக்குப் பெயரிட என்று தான் மனிதன் ராமன்ரஹ்மான்என்றும் கிருஷ்ணன் என்றும் கர்த்தரென்றும் அழைக்கின்றான். பரிபூரணம் இல்லாதவனாயிருந்த போதிலும் இடைவிடாமல் பரிபூரணத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பாகும்.

— காந்தி.

# இழிந்த வாழ்வை உதறி நடக்கிறேன்!

— 'யாலபாரதி' —

அன்புத்தாயும் தந்தையரும் எனை
ஆகாப்பிள்ளையென் றேசி விடுத்தனர்!
பண்பிலாத உறவினர் யாவரும்
பாரம் என்றெனை ஏற்கமறுத்தனர்!
நண்பர்என்றிடும் வஞ்சகரும், எனை
நள்ளிருட்டில் தவிக்கவிட் டேகினர்!
இன்பனே! உனதாவிண இதுவெனில்
ஏழையேன் இதையாரிடம் சொல்லுவேன்?

வாழ்வெனும் மலர்த்தோப்பினில் பூத்த,தேன்
மலரில்ஒன்றைப் பறித்து மகிழ்கையில்,
தேனினும் கொடிதான விஷம் நிறை
தேனியொன்று 'நறுக்'கெனக் கொட்டியே
பாழ்படுத்தி யென் வாழ்வின் மகிழ்வினை
பறித்தெடுத்துத் தனிமையில் விட்டதே!
கூழமென்னும் தெருப்புறக் குப்பையின்
குழியிலே கிடந்திழிநிலை எய்தியே,

வழிதெரியா திருட்டினில் வாடினேன்!
வள்ளலே! உனதினிய கழலொலி,
'கலீர்' என்றேழையேன் காதில் இசைத்தது!
கண்ணெலாம் புது விண்ணொளி பாயுதே!
தெளிந்த பாதையென் கண்ணில் தெரியுதே!
தெய்வ ஜோதியென் முன்னில் ஒளிருதே!
இழிந்தவாழ்வை உதறி நடக்கிறேன்,
எங்கும் பேரொளி பொங்கித் ததும்புதே!

# அருள் வாக்கு

—பகவான் ஸ்ரீ சத்திய ஸாயி பாபா—

ஒரு நாள் கிருஷ்ணனும் அருச்சுனனும் ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணன் அருச்சுனனைப் பார்த்து அது ஒரு புருவா?'' என்று கேட்டார்.

அர்ச்சுனன்:— ''ஆம் அது ஒரு புருதான்''

கிருஷ்ணன்:— ''அது ஒரு கழுகா?

அ:— ''ஆம் அது கழுகுதான்.''

கி:— ''இல்லை அர்ச்சுனா, அது எனக்கு ஒரு காக்கையைப் போல் தெரிகிறது. அது காகமா?''

அ:— ''மன்னிக்கவும், அது சந்தேகத்திற்கிட மில்லாமல் காகம் தான்.''

உடனே கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே, தான் என்ன சொன்னாலும் அதை ஒப்புக் கொண்டதற்காக அர்ச்சுனனைத் தட்டிக் கொடுத்தார். ஆனால் அர்ச்சுனன் ''எனக்கு என் கண்களால் பார்ப்பதை விட உங்கள் வார்த்தைகள் தான் அதிக வலுவுள்ளதாகும். உங்களால் அதைக் கழுகாகவோ, காகமாவோ, அல்லது புருவாகவோ மாற்ற முடியும். நீங்கள் அதைக் காகம் என்றால் அது காகமாகத்தான் இருக்க முடியும். பூரண நம்பிக்கைதான் ஆத்மீக வெற்றிக்கு வழி யாகும்'' என்று கூறினான்.

ஃ ஃ ஃ

கடவுள் பக்தர்களையல்ல, அவர்களுடைய பக்தியைத் தான் நேசிக்கிறார் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கடவுள் அருளானது எங்கும் பெய்யும் மழையைப் போன்று ஒரே மாதிரித் தூய நீராகும். ஆனால் அதனுடைய சுவையானது அங்கங்குள்ள நிலங்களின் தன்மைக்குத் தகுந்தவாறு மாறுபடுகிறது. அதைப் போன்று கடவுள் சிலருக்கு இனியவராகவும் மற்றவர்களுக்குக் கசப்பானவராகவும் இருக்கிறார். கடவுளின் வழிகள் மாயமானவை. அவர் விதுரனை நோக்கி ''நீ

அழிந்து விடு'' என்றார். துச்சாதனனை நோக்கி ''நீ ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து இரு'' என்றார். விதுரனுடைய ''நான்'' என்ற எண்ணம் அழிந்து விடவேண்டும் என்றும், கொடியவனான துச்சாதனன் பத்து நூற்றாண்டுகள் இந்த உலகத்தில் உள்ள துன்பங்களிலும், நோய்களிலும் அவதிப் படவேண்டும் என்பதுதான் கடவுளின் எண்ணம். கடவுளின் செயல்களில் மறைந்து கிடக்கும் உண்மையான காரணங்கள் உங்களுக்குத் தெரியாது. உங்களுடன் உங்களைப் போலவே விருப்பு வெறுப்புடன் வாழும் மற்ற மனிதர்களின் எண்ணங்களையே உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்படியிருக்க மனிதனைவிட மென்மேலும் உயர்ந்த கடவுளின் எண்ணங்களை எவ்வளவுஎளிதாகக் கண்டுபிடிக்கிறீர்கள்! மீனிற்கு ஆகாயம் புதிதாகத் தோன்றுவதைப் போல் உங்களுக்குத் தோன்றும். புதியனவற்றை நீங்கள் எவ்வளவு வேகமாகப் பேசித் தீர்மானித்து விடுகிறீர்கள்.

ஃ ஃ ஃ

## மனிதர்களில் நான்கு வகைகளுண்டு

1— **உணர்ச்சியற்றவர்:—** இவர்கள் தாங்கள் மட்டுமே சுதந்திரமாகவும் தங்களைத் தாங்களே ஒழுங்கு படுத்துபவர்களாகவும் நடத்திச் செல்பவர்களாகவும் சொல்லிக் கடவுளை மறுக்கிறார்கள்.

2— **நோயாளி:—** இவர்கள் தங்களுக்குத் துன்பம் வந்தபோதோ அல்லது தங்களின் வழக்கத்திற்கு மாறாக ஏதாவது ஏற்பட்டாலோ கடவுளை அழைக்கிறார்கள்.

3— **அறிவிலி:** இவர்கள் தாங்கள் உள்ளத்தின் தோழன், காவலன் கடவுள் என்று தெரிந்திருந்தாலும் எப்போதாவதுதங்களுக்குத்தோன்றும்போதுதான்கடவுளைநினைத்து அதன்படி வாழ்கிறார்கள்.

4— **ஆரோக்கியவான்:—** இவர்கள் கடவுளின் மீது நிலையான நம்பிக்கை வைத்து, ஆறுதல் அளிக்கும் அவருடைய பார்வையில் எப்பொழுதும் வாழ்கிறார்கள்.

ஃ ஃ ஃ

பரமாத்மன் ஜீவாத்மனைத் தன்னிடம் இழுத்துக் கொள்கிறது. இந்தக் கவர்ச்சியானது அவைகளுக்கு இயற்கையிலேயே இருக்கிறது. ஏனென்றால் அவைகள் இரண்டும் ஒன்றே. அவைகள் இரும்பையும் காந்தத்தையும் போன்றன. ஆனால் இரும்பு துருப்பிடித்து அழுக்கினால் மூடிவிட்ட பிறகு காந்தத்தால் அதை இழுக்க முடியாது. தடைகளை எல்லாம் நீக்கிவிடுங்கள். இதைத்தான் நீங்கள் செய்ய வேண்டியது. உங்களுடைய உண்மையான தன்மையில் நீங்கள் பிரகாசியுங்கள். கடவுள் உங்களைத் தன்னிடத்தில் அழைத்துக் கொள்வார். விசாரணை, சோதனை ஆகியவைகளின் மூலமாகத்தான் இந்தத் தூய்மையைச் செய்ய முடியும். அதனால்தான் குந்திதேவி, கிருஷ்ணனிடம் ''உங்களை மறவாமல் இருப்பதற்காக. எங்களுக்கு எப்பொழுதும் துன்பத்தையே அளியுங்கள்'' என்று பிரார்த்தித்தாள். நாமஸ்மரணம் என்னும் மருந்தின் பலனை அதிகரிக்கத் துன்பங்கள் அகலும். உங்களுக்கு ஆனந்தத்தை அளிக்கும் எந்த நாமத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஃ ஃ ஃ

இறைவனுடைய விருப்பத்திற்கு ஒவ்வொரு பொருளையும் விட்டு விட்டு சரணாகதி அடைவதுதான் மேம்பட்டநிலை. ஒரு நாள் அந்தணன் ஒருவன் ஆற்றைக் கடந்து கொண்டிருந்தான். அங்கு சிலமனிதர்கள் ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தனர். அந்த அந்தணனின் உடலில் ஒருபுதிய அழகானபட்டு உத்தரீயம் இருக்கக் கண்டனர். உடனே அவர்கள் எல்லோரும் அந்த உத்தரீயம்துவைப்பதற்காக அரண்மனையில் கொடுத்தது என்றும், அதை அந்தணன் திருடிக் கொண்டதனால் இங்கு காணவில்லை என்றும் கூறி அவனைச் சூழ்ந்து அடிக்கத் தொடங்கினர். மழைத்தாரைகள் போன்ற அந்த அடிகளின் மத்தியில், ஏழை அந்தணனே நாராயணா! நாராயணா! என்று சொல்லிக் கொண்டே அலறினான்; கூக்குரலிட்டான். அதனால் நாராயணன் வைகுண்டத்தில் தன் ஆசனத்திலிருந்து எழுந்து முன்னோக்கி வந்தார். ஆனால் உடனே திரும்பித் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார். அப்பொழுது அவருடைய செயல்களினால் ஆச்சரியப்பட்டுக் காரணத்தைக் கேட்டவர்களுக்கு, நாராயணன் கூறியதாவது, ''போக்கிரிகளின் வலையிலே வீழ்ந்து விட்ட அந்த ஏழை அந்தணனுக்கு உதவி செய்ய

விரும்பினேன். ஆனல் அவன் அடிக்கு அடி திருப்பிக்கொடுக்க ஆரம்பித்துவிட்டான். அதனல் என்னுடையஉதவிஇனியும் அவனுக்குத் தேவையில்லே.

ஃ ஃ ஃ

சம்சாரம் என்னும் சாகரத்தைக் கடப்பதற்கு உதவும் இரு துடுப்புகள் பக்தியும் சிரத்தையுமாகும். இரவில் படுக்கைக்குச் செல்லும் பொழுது குழந்தை தாயை நோக்கி ''அம்மா! எனக்குப் பசி எடுக்கிற பொழுது என்னை நீ எழுப்பு'' என்று சொல்லிற்று. அந்தத்தாய் ''அதற்கு அவசியமில்லே. நீ பசியாக இருக்கிற பொழுது அந்தப் பசியே உன்னை எழுப்பி விடும்'' என்று கூறினள். அதைப் போல் கடவுள்என்ற பசிஉங்களுக்கு வந்த பொழுது, அந்தப் பசியே உங்களுக்குத் தேவையான ஆகாரத்தைத் தேடிக்கொள்ளும் படி செய்து விடுகிறது. கடவுள் உங்களுக்குப் பசி என்ற உணர்ச்சியைக் கொடுத்து அதற்குரிய ஆகாரத்தையும் கொடுக்கிறர். நோயைக் கொடுத்து அதற்குரிய மருந்தையும் அளிக்கிறர். உங்களுடைய கடமை யாதெனில் நீங்கள் தகுதியான பசியையும், சரியான நோயையும் அதற்குத் தகுந்த உணவையும் மருந்தையும் உபயோகிக்கிறீர்களா என்று பார்க்க வேண்டியதுதான்.

ஃ ஃ ஃ

புகழ் பெற்ற ஆங்கில அறிஞரான டாக்டர் ஜான்சனிடம் ஒருவர் தனக்குக் காலே முதல் இரவு வரையிலும் சில வேளேகளில் இரவிலுங்கூட நூற்றுக் கணக்கான வேலேகள் செய்ய வேண்டியிருப்பதால் கடவுளின் நாமத்தைச் சொல்வதற்குக் காலம் கிடைப்பது அபூர்வமாக இருக்கிறது என்று கூறினர். டாக்டர் ஜான்சன் மற்ருெரு கேள்வியின் மூலம் பதிலளித்தார். உலகத்தின் மொத்த அளவில் மூன்று பாகம் நீராகவும் ஒரு பாகம் நிலமாகவும் இருக்கிறது. அந்த நிலத்திலும் பெரும்பகுதி மலேகளும், பாலேவனங்களும், காடுகளும், ஆற்றுப்படுக்கைகளும் இன்னும் இம்மாதிரி மனிதன் வசிக்க முடியாத பாகமாக இருக்கிறது. இம் மாதிரியான நிலத்தில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதற்கு எப்படி இடம் காண்கிறர்கள்? எனக் கேட்டார். அதற்கு அவர் மனிதன் மிகக் கஷ்டப்பட்டு

தான் வாழ எப்படியும் ஒரு இடத்தைக் கண்டு பிடிக்கிறான் என்று சொன்னார். அதைப் போலத்தான் மனிதனும் ஒரு நாளில் சில நிமிஷங்களையாவது கடவுள் வழிபாட்டுக்காகக் கண்டு பிடிக்க வேண்டும் என்று டாக்டர் ஜான்சன் கூறினார்.

ஃ ஃ ஃ

உயர்ந்த வைராக்கியத்திற்கு மோகஜித்தின் கதை ஒரு நல்ல உதாரணம். இளவரசனான மோகஜித் காட்டிலுள்ள யோகி ஒருவரிடம் சென்று பரமார்த்திக வாழ்விற்கு வழி காட்டும்படி வேண்டினான். அந்த யோகி உன் நாமமே மோகம் என்றிருக்கிறது. நீ மோகத்தை வென்று விட்டாயா? என்று கேட்டார். அந்த இளவரசன் தான் மட்டுமல்ல, தன் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் மோகத்தை வென்று விட்டார்கள் என்று கூறினான். ஆதலால் அந்த யோகி அவனுடைய கூற்றைப் பரிசோதிப்பதற்காகப் புறப்பட்டார். அவர் இளவரசனின் மேலாடையை வாங்கி இரத்தத்தில் நனைத்துக்கொண்டு, இளவரசன் காட்டிலுள்ள முரடர்களால் கொல்லப்பட்டார் என்ற கதையுடன் அரண்மனை வாயிலுக்கு விரைந்தார். அங்கு அவரைச் சந்தித்த வேலைக்காரி இந்தச் செய்தியை அரண்மனைக்கு விரைந்து கொண்டு செல்ல மறுத்து விட்டாள். மேலும் அவள், அவர் பிறந்தார்; இறந்து விட்டார். என்னுடைய வழக்கமான பணிகளை விட்டுவிட்டு மன்னனுக்கும் இராணிக்கும் ஓடிச் சென்று அந்தச் செய்தியைச் சொல்வதற்கு அதில் என்ன தனித்தன்மை இருக்கிறது? என்று கேட்டாள். கடைசியில்இந்தத்துக்ககரமான செய்தியைமன்னனுக்குஎடுத்துச் செல்ல ஒரு ஆள் கிடைத்தார். ஆனால் மன்னனோ அமைதியாகத் தனக்குத்தானே ''ஒரு பறவை ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக உட்கார்ந்திருந்த மரத்தை விட்டுப் பறந்து போய் விட்டது'' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தான். இராணி கூட நகரவில்லை. அவள் அந்த யோகியை நோக்கிக் கூறினாள். இந்த உலகம் ஒரு சத்திரத்தைப் போன்றது. இரவு தங்க அங்கு பல மனிதர்கள் வருகிறார்கள். விடிந்ததும் அவரவர்கள் தங்களுடைய வழிகளில் போய்விடுகிறார்கள். அந்தச் சத்திரத்தில் சிறிது நேரமே தங்கும் பிரயாணிகளிடம் ஏற்பட்ட பாசத்திற்கு நாம் உபயோகிக்கும் வார்த்தை சுற்றத்தார் என்பது.

இறந்த அந்த இளவரசனின் மனைவி கூட இதனால் பாதிக்கப்படவில்லை. அவள் கூறினாள். ஆற்று வெள்ளத்தில் மிதந்து செல்லும் இரு மரக்கட்டைகள் போன்றவர்கள் தான் கணவனும் மனைவியும். அவைகள் கொஞ்சநேரம் ஒன்றாகச் செல்லும். வெள்ளத்தில் ஏதாவது தடங்கல் ஏற்படும் பொழுது அவை பிரிந்து செல்லும். ஒவ்வொன்றும் கடலை நோக்கி அந்தந்த வழியில் அந்தந்தக் காலத்தில் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த இரண்டும் பிரிந்து விட்டதைப் பற்றித் துக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. இயற்கையின் இயற்கையே அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்பது.

ஃ ஃ ஃ

பக்தியைக் கொண்டு வந்து இங்கு அர்ப்பணித்து அதற்குப் பதிலாகச் சக்தியை எடுத்துச் செல்லுங்கள். இதை எவ்வளவு அதிகமாகச் செய்கிறீர்களோ அவ்வளவு மகிழ்ச்சியை நான் அடைகிறேன். நீங்கள் உங்களிடத்திலுள்ள வருத்தங்கள், துன்பங்கள், கவலைகள், ஆசைகள், யாவற்றையும் இங்கு கொண்டு வாருங்கள். என்னிடமிருந்து மகிழ்ச்சி, அமைதி, துணிவு, நம்பிக்கை இவைகளை எடுத்துச் செல்லுங்கள். பக்தர்களில் அதிகநாள் பக்தியுடையவர், சிறிதுநாள்பக்தியுடையவர்என்றவேற்றுமைஎன்னிடத்தில்இல்லை. நோயாளியாகஇருக்கும்குழந்தையினிடத்துத் தாய் அதிக நேரத்தைச் செலவிடுகிறாள். மூத்த குழந்தைகளிடம் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும்படி சொல்கிறாள். நலிந்த குழந்தைக்குத் தன் கையினால் உணவூட்டுகிறாள். இதனால் தாய்க்குத் தன் வளர்ந்த குழந்தைகளிடத்து அன்பு இல்லை என்று அர்த்தமில்லை. இதைப் போல ஒருவரை நான் கவனிக்காமல் இருப்பதால் அவர்கள் என் பிரேமையிலிருந்து விலகிவிட்டார்கள் என நீங்கள் நினைக்க வேண்டாம்.

ஃ ஃ ஃ

**சகல சக்திகளுக்கும் அஸ்திவாரமான சக்தியே கடவுள். மற்றச் சக்திகளெல்லாம் உலோகாயத சக்திகள். கடவுளோ அதுதான் ஜீவசக்தி. சர்வ வியாபகமானது, அதனால் யாராலும் அறிய முடியாது.**

**—காந்தி.**

# " ஆசிரியரின் நேர்மை "

யோகாசிரியர். ஸ்ரீ எஸ். ஏ. பி. சிவலிங்கம்; இமயமலை.

பல்லாண்டுகள் ஒரே பள்ளியில் சிறிது சிறிதாக தலைமை உபாத்தியாயப் பணிக்கு வந்த ராமனுதனை அப்பள்ளியில் அறியாதார் யாருமில்லை யெனலாம்.

நேர்மை, பெண்களிடமும், மாணுக்கர்களிடமும், மாருத கடமை அன்பு, அனைவரிடமும் சொல் வன்மை, அறிவுத் திறன், பக்தி, தெய்வீக வாழ்வு இவைகளுடன் தன் குடும்பத்தையும் பராமரித்து வந்தார். நல்ல கட்டு மஸ்தான உடல். எச்சமயத்தும் சிரித்த முகம், காண்போரது உள்ளத்தில் அவரது நினைப்பு அனைவரையும் ஆட்கொள்ளும் தன்மை.

வறுமையால் நீண்ட அக்குடும்பம், அவரது மாருத நல்லொழுக்கத்தாலும், அறிவுத்திறனுலும் ராமநாதன் என்ருல் அனைவரும் கண்ணியமான மதிப்பும், நன் கடமையும் வைத்திருந்தனர். பெற்ருேர்களற்ற அவர்கள் குடும்பம் தம் வாழ்க்கையை இறைவன் மீது அமர்த்தி அவரது நாமாவைச் சொல்லி வாழ்வை சொர்க்க லோகமாக அமைத்து ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தனர். மாலையில் முக்கியமானவர்கட்கு டியூசன் பாடம் வகுப்பு முடித்து ஒரு மணி நேரம் டிரில் கற்றுத்தரல்.

நாட்கள் கடந்து கொண்டிருந்தது. இவ்வாருகப் பல மாதங்கள். பல்லாண்டுகள் சொல்லிக் கொண்டிருந்தார். அன்று ஒரு நாள் பலமணி நேரமாகியும், வீடு திரும்பாத கணவனைக் காணுத மனைவி மிகவும் துக்கத்தில் சாப்பிடாது இறுமாந்திருந்தாள். இரவு பதினெரு மணிக்கு வரலுற்ருர். இவ்வாறு பல நாட்கள் மனைவி கேட்டதில் தாம்கற்றுத்தரும் கல்வியைப்பற்றியும்விபரமாகஎடுத்துரைத்தார். மனைவியோ நாதா இக்கஷ்டப்பட்டு பல பெண்கட்கு ஏன்இரவில் கற்றுத் தந்து தனது உடல், உணவு இவைகளை மறந்து நேரங்கழித்து உண்டால் உடல் நலமற்று விடுமே எனச் சொல்லி துக்கித்தாள். ஒருவாறு சமாதானம் செய்து அவளை அனுப்பினுன்.

நாட்கள் மாதங்களாகக் கடந்தன. அன்று இரவும் இதே பாடப்படிப்புசொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். யாதோ மனம்புல்லரித்தது, சொல்லொணுதஇதயத்துடிப்பு, காம இச்சை அவரை அடக்கியது. அறிவு, சிந்தித்துணர்; மனத்தையடக்கு என்றது. மனம் உந்தியது, இவ்விரண்டிற் குமிடையில் அறிவே ஜெயம் பெற்றது. நாட்கள் கடந்தன. எவ்வாறே இவ்விஷயத்தை மாணவி ஊகித்துக் கொண்டு திடுக்கிட்டாள். இது சிறுகச் சிறுக ஊர் பூராவும் பரவிற்று. பலர் பலவாருகச் சொல்ல ஆரம்பித்தனர். மற்றும் பலர் ராமனுதன் அவ்வாறு செய்யமாட்டார்என்றனர். கடைசியில் அவரைச் சோதிப்பதைப் போன்று எங்கும் அவரைப் பற்றி இகழ ஆரம்பித்து விட்டனர். அம்மாதடியூசன் சம்பளமும் தரவில்லை. துக்கித்தார். அவரது மனம் மிகவும்துக்கித்து சிந்தித்து இறைவனிடம் முறையிட்டழுதார். பிராணநாதா அறிந்தும், அறியாமலும்செய்த அடியேன்பிழையைப் பொறுத்தருள்வாய், அது உன் கடமையே, மனம் தடுமாறிற்று, அறிவால் சிந்தித்து ஓங்கினேன். அதற்கிதுவா கூலி? 40நாட்கள் துன்புற்று கற்றுத்தந்த பாடத்திற்கு ஒன்றும் இல்லையே என பலவாருக துன்புற்ருர்.

சார், போஸ்ட் இதுதபால்காரனின் குரல். கவலையுடன் முகம் வாடி சிந்தித்துக் கொண்டே சென்று வாங்கலுற்ருர். என்ன ஆச்சர்யம்? யாருக்கு டியூசன் சொல்லிக் கொடுத்தாரோ அவரே ரூபாய் 100/– மணியாடர் செய்திருந்தார். ஆச்சரீயமும், சந்தோசமும், இறைவன்மீது பக்தியும் தாங்க முடியாது பக்தி பிரவாகத்தால் அழுது ஆருயிர்நாதனை கும்பிட்டு, இறைவா உன் சோதனை என எண்ணி அன்றிலிருந்து புது ராமநாதனுனர். பின் அங்கு சென்றுதான் செய்தவற்றை நினைந்து மன்னிப்புக் கேட்டார்.

''சிறிதாயினும் வழி தவறி நடப்போமாயின் இறைவன் தண்டனை பெரிது'' என்பதை விளக்குகிறது நமக்குஇக்கதை.

---

**கடவுள் சமுத்திரம் போல் விசாலமாயும் எல்லையற்றுமிருந்தால் ஒரு சிறு துரும்பு போன்ற மனிதன் எவ்வாறு கடவுளைக் கற்பனை செய்து கொள்ள முடியும்? கடலுக்குள் விழுந்து அமிழ்ந்தால்தான் கடவுளைப் பற்றி அறிந்துகொள்ள முடியும். இப்படிப்பட்ட அனுபவத்தை வாயால் கூறமுடியாது.**

**— காந்தி.**

# ஓ மனிதா, உன் தெய்வத்தைப் பார்!

ஸ்ரீ சுவாமி சிவானந்தா

ருஷ்ய நாட்டு வானவெளிவீரன், கடவுள் இருக்கிறார் என்கின்ற நம்பிக்கையை நிந்தித்தவன், பிறகு, ''இவ்வுலகை அதன் நிலையில் வைத்திருப்பது யார்?'' என்று பிரமித்து நின்றான். இதற்கு விடை மிகவும் சுலபமானது; எந்தக் கடவுளின் நிலைபேற்றையே அவன் மறுத்தானோ, அந்த கடவுள் தான்!

அஞ்ஞானம் நிறைந்த மனிதா! உனக்கு உயிர் மூச்சைக் கொடுத்திருக்கும் அவரையே நீ எவ்வளவுநாள் மறுத்துக் கொண்டிருக்கிறாய்! இப்பொழுதாவது விழித்தெழு. நீ ஒரு மயக்கத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறாய். இயந்திரங்களும், தொழிற்சாலைகளும் உனது சந்தோஷத்தை உண்டாக்குவதாக நீ நம்புகிறாய். உனது பாதுகாப்புத் தேவைகளையே நீ மறுக்கிறாய் போலும். மலைஇடுக்கில் நழுவிக்கொண்டிருந்தும், ஆனால் அதே சமயத்தில், ''நான் முற்றிலும் பத்திரமாக இருக்கிறேன், உயிர்ப்பாதுகாப்புக்கயிறு என்னுடைய இடுப்பில் இன்னும் இருக்கிறது.'' என்று கூச்சலிடும் மலை ஏறும் வீரனைப்போல, நீ ஆடம்பரத்தில் சொகுசாக இருந்து வருகிறாய். இன்னும் ஒரு சில விநாடிகளில், அந்த உயிர்ப்பாதுகாப்புக்கயிறே அவ்வீரன் கழுத்தை இறுக்குகிறது. இன்னும் சில நாட்களில் நீ இப்பொழுது அனுபவித்துவரும் பொருள்களே உனது அழிவைத் துரிதப்படுத்தும். கயிறு நீட்டமாக இருக்கிறது; ஆனால் நீ எவ்வளவுக் கெவ்வளவு வழிதப்புகிறாயோ, அவ்வளவுக் கவ்வளவு அது உன்னை திக்குமுக்காடச் செய்தலும் அதிகமாக இருக்கும்.

இப்பொழுது விழித்தெழு! கடவுளின் கருணையைப் பெறுவதற்குஒருபொழுதும்அதிககாலதாமதமாவதில்லை. கடவுள் நேசிப்பதுபோல், உன்னை வேறுயாரும் நேசிப்பதில்லை. ஏனெனில் அவர் உனது ஆத்மாவுக்கே ஆத்மாவாக இருப்பவர். உனக்காக அவர் காட்டும் அன்பை நீஎதனோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியும்? அவரை மறுக்கின்ற அந்த நாக்கிற்கே அவர் சக்தி கொடுப்பவராக இருக்கின்றார்! அன்புள்ள தாய் ஒருத்தி, தன்னைத் துன்புறுத்திவிட்டுத் தன்னிடமிருந்து ஓடிப் போகும் துர்க்குணம் வாய்ந்த தனது பிள்ளையின் பைக்குள்

யாருக்கும் தெரியாமல் சில பழங்களை வைத்து நிரப்பிவிடுவதைப்போல, நீ கடவுளை மறுத்தபோதிலும், அதே கடவுள் உனக்காகஇவ்வுலகிலுள்ள சகலவஸ்துக்களையும்கொடுத்தருளியிருக்கிறார்.

அவர் விஞ்ஞானியினுடைய அறிவிற்கு அறிவாக விளங்கவில்லையா? அவர் வீர சிப்பாயினுடைய பலமாக இருக்கவில்லையா? அவர் அரசாட்சி நடத்தும் ராஜதந்திரியின் அறிவாக இருக்கவில்லையா? ஆடம்பரப் பொருள்களை இயந்திரங்கள் உற்பத்தி செய்யவில்லை. ஆனால் அந்தஇயந்திரங்கள்சிருஷ்டி செய்து அதை இயக்குகிறவனுடையகூர்த்தமதிதான் அவற்றை உற்பத்தி செய்கிறது. சிப்பாய் உங்களைப் பாதுகாக்கவில்லை; ஆனால் அவனிடத்திலுள்ள உயிரின் சக்தி பாதுகாக்கிறது. ராஜதந்திரி ஆட்சி செலுத்தவில்லை; ஆனால் அவனிடம் விளங்குகிற ஞானம் ஆட்சி செலுத்துகிறது. இவை எல்லாம் கடவுளின்—உன்னுடைய கடவுளின்—அம்சங்களைத் தவிர வேறில்லை. அப்படியிருந்தும் நீ இன்னும் தொடர்ந்து அவரைப் புறக்கணித்துக் கொண்டிருக்கிறாய்.

விழித்தெழுந்து உன்னுள்ளிருக்கும் பகவானைப் பார். நீ அவரை உணர்வதற்காகத்தான் அவர் உனக்கு இந்த மதிக்கமுடியாத மானிடப் பிறவியைக் கொடுத்தருளியிருக்கிறார். நீ லக்ஷியத்திலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறாய்? சுடுகாட்டிற்கு எவ்வளவு பக்கத்திலிருக்கிறாய்? அவர் தன்னுடைய ஏனைய குழந்தைகளான உன்னுடைய சொந்த சகோதர சகோதரிகளுடன் நீ பங்கிட்டுக்சொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் உனக்கு ஆரோக்கியம், செல்வம், திறமைகள் ஞானம் ஆகியவற்றைக் கொடுத்தருளியிருக்கிறார். மேலும் அவரே உங்கள் முன்னிலையில் ஏழையாகவும், நோயாளியாகவும், அஞ்ஞானியாகவும் காட்சி கொடுக்கிறார். அவர்கள் முகங்களில் எழுதப்பட்டிருக்கும், ''மகனே, என்னை அடையாளம் தெரிகிறதா?'' என்கிற கேள்வியை உங்களால் படிக்க முடிகிறதா? ஆரோக்கியமான சரீரம் இறந்துவிடும். உன்னுடைய செல்வம் சிறிது காலத்திற்கே உனக்கு சொந்தமாக இருக்கும். அப்படியிருந்தும் அது விரோதிகளையும், தலைவலியையும், இரத்தக் கொதிப்பையும்தான் உண்டாக்குகிறது. உங்கள் திறமை வாடிவிடும்; ஆனால் உங்கள் ஞானம் ஒன்றுதான் உங்களுடையது. அதுதான் இனிச் செல்லவேண்டிய இடத்திற்கு உங்களோடு தொடர்ந்துவரும்.

ஓ மனிதா! புத்திசாலியாக இரு. உன்னுடைய கடவுளை, உன்னிலும், உன்னைச் சுற்றிலுமுள்ள புல் முதல் பிரகாசம் பொருந்திய சூரியன் வரை, சகலத்திலும் காண்பாயாக. ஆண்டவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

# சத்குருவே சர்வேஸ்வரன்

(ஸ்ரீமதி சிவானந்த சந்தானம்மையார்)
தெய்வ நெறிக் கழகம், மதுரை.

''குருர்சிவோ குருர்தேவோ குருர்பந்து சரீரிணும்,
குருராத்மா குருர்ஜீவோ குரோரரன்யன்ன வித்யதே''

குருவே சிவன். குருவே தெய்வம். குருவே பந்து மித்திரர்கள். குருவே ஆத்மனும் ஜீவனும். குருவிற்கு அந்நியமானது ஒன்றுமில்லை.

க்ஷணந்தோறும் மாறி அமையும் இயற்கையை இயக்குவிக்கும் சக்திக்கு ஆதாரமாய், சாக்ஷியாய், திவ்யமங்கள சிவம் அசையாதுள்ளது. பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்துள்ள ஏகவஸ்துவாம், சிவம் தன்னை எண்ணில் நாமரூபமாய் உற்றூர், உறவினர், நண்பரெனத் தோற்றுவித்துக் கொண்டு பிரபஞ்ச நாடகத்தை ஆடுகின்றது. ஆயுதங்களால் வெட்டுணாத, நெருப்பால் வேகாத, நீரினால் நனையாத, காற்றினால் உலராத, நித்தியமான, நிர்மலமான, நிலையானஅசைவற்றதான,ஆனந்தமான,அந்தஆத்மஸ்ரூபம், கோபம், பொறாமை, துக்கம், ஆகிய ஆகுலங்களுக்கு உட்பட்ட ஜீவர்களாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு திருவிளையாடல் புரிகின்றது.

ஜனன மரணச்சுழலில் அகப்பட்ட ஜீவன், இன்பத்தை நாடிவந்த இப்புவியில் துன்பந்தானே வருகின்றது என்று அந்தத் துக்கத்தினின்று தேடுகிறான். அரசன் முதல் ஆண்டிவரை துக்கப்படாதவர் எவருமில்லை. எல்லா உயிரும் இன்பத்தை நாடினாலும் துக்கமே வந்தெய்துகிறது. எவ்வளவு

தடுக்க முயன்றாலும் மனம் துன்பத்தில் உழலுகிறது. துக்க மின்றேல் முன்னேற்றமில்லை. அது இறைவனது வரப்பி ரசாதம். துக்கம் வரும்போது துக்கநிவர்த்திக்கு முயற்சி செய்கிறோம்.

முக்காலத்தை அறிபவரும் எல்லைக்குள் கட்டுப்படாத சிவமுமான பரம்பொருள் தேகத்தினுள் கட்டுப்பட்டவர் போன்று தன்னைத்தோற்றுவித்துக்கொண்டு குருவாய் வந்து சிஷ்யர்களாகிய தன் குழந்தைகளுக்கு விவேகமாகிய ஜீவா மிர்தத்தைப் புகட்டுகிறார். பிரபஞ்சப் பொருள்களாகிய விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாடிக் கொண்டி ருக்கும், ஜீவர்களான குழந்தைகள் விளையாட்டுப்பொருள் களிலிருந்து நிறைவு காணாது அன்னையின் அரவணைப்பிற்காக கோவென்று கதறிஅழும்போது எம்பெருமானும் குருதேவர் தாயாய்வந்து எடுத்துத்தேற்றி ஆறுதல் அளிக்கிறார்; ஞான அமுது ஊட்டுகிறார்.

குழந்தையின் வளர்ச்சிக்கேற்ப தாயின் பாலின் தரம் மாறுகிறது பராசக்திக்கு அந்நியமல்லாத சிவமாம் குரு தேவர், நாம் ஆற்றும்ஆத்மசாதனத்திற்கேற்ற சூழ்நிலையெல் லாம் தம் கருணையினால் நமக்குத்தருகின்றார். கீழ் நிலையில் நாம் இருக்கும் பரியந்தம் தக்கமுறையில் நம்மைப்பரிபா லித்து மேன்நிலைக்குக் கொண்டு வருகிறார்.

இத்தகைய அரும்பெருங் குணக்குன்றாகிய குருவின் மகிமையை விளக்கிவருங்கால் குருவும் பரமேஸ்வரனும் சேர்ந்து நிற்பரேல் நான்யாருக்கு அடிபணியட்டும்? சத் குருதேவா, நான் உம்மிடம் என்னை அர்ப்பணிக்கின்றேன். ஏனெனில் நீரன்றோ எனக்கு இறைவனைக்காட்டியருளினீர்! என்பதாக,

**''குருகோவிந்த் தோவு கடே காகே லாகௌன்பாய்**
**பலிஹாரி குரு ஆப்னே கோவிந்த் தியோ பதாய்''**

என்னும்தமது ஈரடிப்பாவில் கபீர்தாஸர் இயம்புகிறார்.

குணக்கடலாகிய சத்குருவை சகலமான விதத்திலும் அதாவது மனோ வாக்குக்காயத்தால் மகிழ்வித்து வழிபடு தல் சிஷ்யனுடைய மேலாம் கடமையாகும். சர்வேஸ்வ

ரன் சினமுறுங்கால் சத்குரு காக்கிருர். சத்குரு கோபமுற்ருல் ரக்ஷிப்பவர் எவருமில்லே. எனவே மேலாம் சத்குருவைப்பெற்ற ஒருவர் உரியமுறையில் அவரைச் சார்ந்திருத்தல் அவசியமென்பதை,

'சிவே ருஷ்டே குருஸ்த்ராதா குரௌருஷ்டே நகஸ்சன
லப்த்வா குலகுரும் ஸம்யக் குருமேவ ஸமாஸ்ரயேத்'

என்னும் ஸ்லோகத்தில் சத்குரு கடாட்சமின்றி எந்த சாதனமோ அன்றி ஆத்மசாக்ஷாத்காரமோ ஏற்படுவதற்கில்லே. சத்குரு,சாக்ஷாத் சர்வேசுவரனின் பிரதிநிதியாய் இப்புவியில் அவதரிக்கிருர். குருவின் மஹிமை நாவினுல் நவிலுதற்கரியது என்னும் பேருண்மையை குரு கீதையாக பரமசிவன் பார்வதிக்கு உபதேசிக்கிருர்.

அருளே உருவாய் அவதரித்த சிவானந்த சத்குருவை ஆஸ்ரயித்த நம்பாக்கியம் எவருக்கும் கிடைக்கும் தரமோ?

இவ்விடத்தே நாம் சில அடிப்படைத் தத்துவங்களேப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். பிரபஞ்சமயமாய் இயங்கும் அன்னே பராசக்தியும் பரமபிதாவாம் சிவமும் ஒன்றே என்பதை அர்த்த நாரீசுவரர் உருவம் விளங்குகிறது. குருபரம்பரைக்கே ஆதிகுருவான தக்ஷிணுமூர்த்தி பரமபிதாவான சிவனுக்குப் பிறிதானவர் அல்லர்.

ஓதுகின்றவேதம்சொல்மயமானது. விரிவடையக் கூடியது.சுருங்கக்கூடியது.ஆனுல்பிரபஞ்சஸ்வரூபமான இயற்கையன்னே வேதமயமானவள்; அழியாதவள். வித்தியாகையன்ருபியாணிவேதத்தாய் குருவாய் நின்று இயற்கையில் நிகழும்ஒவ்வொரு நிகழ்ச்சிமூலமும் பாடம் புகட்டிக்கொண்டே இருக்கிருள். பிரகிருதியோடு முறையாகத் தொடர்பு கொள்ளும்போது நாம் வேதத்தை அனுபவத்தின் மூலமாகக்கற்கிருேம். சிறு குழந்தையாம் சிஷ்யன் தாயாம் பிரகிருதியின் பராமரிப்பிலிருந்து பின்னர் அவள் மூலமாகவே வேதாந்தமாம் தந்தையை அறிகின்றனன். தான் அடையவேண்டிய இலக்காகிய சத்-சித்-ஆனந்த அகண்ட ப்ரம்மமாம் குருவை அறிகிருன். அறிவோன் அறியப்படுவோன் அறியும் அறிவு ஆகிய திரிபுடி நீங்கி ஏகமாகிறது.

ஸ்ரீ சிவானந்த ஜகத்குரு, தனது பொல்லாததும், மட

மையே நிறைந்ததுமான சேயையும் அணைக்கும் கருணை வடிவாம் தாயென தனது சிஷ்யர்களை அணைத்துக் காக்கிறார். வாழ்க்கையாகிய நீண்டபாதையில் நாற்பக்கமும் இருள் சூழ்ந்து புயலாலும் சூறுவளியாலும் இடருறும் போதும் எதிரே மதிலென வானளாவிய பர்வதங்கள் வழியைத்தடுக்கும்போதும், கண்டவாறு பெருக்கெடுத்தோடும் காட்டாறு பெருஞ்சேதமும் அழிவும் ஏற்படுத்தும் போதும் அனுதரக்ஷகரான சிவானந்தசத்குரு அன்னையாய் தந்தையாய், ஆசானுய், பந்து மித்திரராய், அந்தந்தவேளையில் அருளி ரக்ஷிக்கின்றார். அருவாய் உள்ளத்தில் உள்ளுணர்வாகிய ஒளியாய் நின்று, உள்ள நிலையிலிருந்து அடுத்தபடி என்னசெய்வதென வழிகாட்டுகிறார்.

நல்லதையே மேலானதையே எண்ணு. நன்மையையே செய், என்கிறார் சிவானந்தகுரு. குருதேவர் இயம்பியவாறு நடப்போமே என்று எண்ணிய மாத்திரத்திலேயே நாலாபக்கமிருந்தும் அன்பையும் அருளையும் சொரிந்து கருணைவெள்ளத்தில் திணரடித்து விடுகின்றார். ''உலகெலாம் உன்னுடையது; உனக்குச் சொந்தம்; நீ பெரியதிலும் பெரிய மாமன்னனின் மைந்தனன்றோ!'' என்கிறார். மிகக்குறுகி கூம்பியிருந்த உள்ளத்தை மலரச்செய்து ஊரெல்லாம் தனக்குச் சொந்தமென்பதை மனதார அனுபவித்து உணரச்செய்கிறார். ஸ்தூலமாய் தன்னைமறைத்துக் கொண்டாரே எனமனம் ஏங்கித்தவிக்கும் போதெல்லாம் தன் பிரதிநிதிகளாகிய மஹாத்மாக்கள் உருவில் வீடு தேடிவந்து அன்பைப்பொழிந்து தைரியமும் துணிவும் ஊட்டி ஊக்குவிக்கிறார்.

**குர்வன்னேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம் ஸமா:**
**ஏவம் த்வயி நான்ய தேதோஸ்தி நகர்ம லிப்யநேரே''**

என்ற ஈஸாவாஸ்யோபநிஷதிற் கிணங்க, உலகமாகப் பரந்து கிடக்கும் ஜீவர்களாகக் காட்சியளிக்கும் சிவனுக்குத் தொண்டு செய். இதுவே நீ உய்வதற்கான ஒரே மார்க்கம். பிறிதொரு மார்க்கமில்லை. நாராயணனுக்கு ஆற்றும் பணியென கைங்கரியம் செய்யும்போது கர்மபந்தத்தினின்று முக்தி அடைவாய் என்கிறார் குருதேவர். தந்தையாய், தாயுமானவராய், ஆசாரியராய், காக்கும் தெய்வமாய், சகலமுமாய் அருள்பாலிக்கும் சிவானந்த சத்குருநாதரின் இணையடி மலர் வாழ்க!

# இறை நாமமே இன்பம் தரும்

அரிது, அரிது, மானிடராதல் அரிது என்றார் ஔவைப் பிராட்டியார். அரியமானிடப்பிறப்பெய்திய நமக்கு, ஆறறிவைத்தந்தான் ஆருயிர்த்துணையான ஆண்டவன். நமது பகுத்தறிவானது பண்பட்டுப் பக்குவநிலையெய்தி பரமனின் பாதாரவிந்தத்தை அடையவேண்டிய ஆற்றலும் நமக்கு இறைவன் தந்துள்ளான்.

இறைவன் அன்பு மயமானவன். அன்பே அவனது சொரூபம் அன்பே சிவம் என்றும், அன்பே என் ஆருயிரே அன்பெனும் கனியே என்றும் அருட்பெரியார்கள் அகங்குழைந்துபாடியுள்ளார்கள். அன்புருவாகவும்அருவுருவாகவும் நம் உயிருக்கு உறுதுணையாகவும் நிறைந்துநிற்கும் அம்மை அப்பராகிய இறைவனை அல்லும், பகலும், கூவி அழைக்க வேண்டியது நம்கடமைகள் எல்லாவற்றுள்ளும் முதற் கடமை. காலையும், மாலையும், கடவுளைத்தொழு, என்றும் அரனைமறவேல் என்றும் ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்றும் நம் ஆன்றோர் அகமகிழ்ந்துரைத்தார்கள். நமது வாழ்வு இரண்டு பிரிவாகப்பிரிந்து நிற்கின்றது. ஒன்று அக வாழ்வு, மற்றது புறவாழ்வு. அகமும்புறமும் இணைந்து வாழ்வதுதான் மனிதவாழ்க்கையின் இலட்சியம். சாதாரணமாக ஒருவரை நாம்அழைக்கவேண்டி இருந்தால் அவர் பெயரைச் சொல்லித்தான் அழைக்க வேண்டும்.

அப்பொழுது அவன் நம்மை அறிந்து சேமம் விசாரிப்பான். அது போன்று இன்பம் பல நல்கும் இன்பப் பொருளாகிய இறைவனையும் அழைத்தால் நமது சேம நலன்களை விசாரித்து ஆவன செய்வான். அதை எவ்வாறு என்ன பெயர் சொல்லி அழைக்கலாமென்று மணிவாசகர் வினவுகிறார். 'ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் தெள்ளேணம் கொட்டாமோ' என்று வினவிய அவர் 'யா னேயோ தவஞ் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்' என்றும் கண்ணீர் சிந்துகின்றார். என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் அரனுக்கு நம்மீது அன்பு பெருகுமே தவிரக் குறையாது. சிவ, சிவ என்றிடத் தீவினை மாளும் என்றும் அரகர என்ன அரியதொன்றில்லை என்றும் சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை என்றும் திருமூல யோகி கூறுகின்றார்.

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நா னறிவிச்சையும்
நமச்சிவாயவே நா நவின்றேத்துமே
நமச்சிவாயவே நல்வழி காட்டுமே

என்றும்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும மெய்ப் பொருளாவதும்
நாதன் நாமம் நமச் சிவாயவே

என்றும் கூறினர் அப்பரடிகள்

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்னபடி
நில்லா ரறத்தை நினையார் நின்னை நினைவிற் சற்றும்
இல்லா ரிருந்தென் னிறந்தென் புகல்கச்சி யேகம்பனே

எனக் கூறி இறை நாமத்தை நினையாதார் இவ்வுலகில் இருந்தென்ன இறந்தென்ன என்கின்றார்.

படிக்கின்றிலை பழனித் திருநாமம் படிப்பவர் தாண்
முடிக்கின்றிலை முருகா என்கிலை முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை பரமானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது நமக்கினியே

என்று தன் மனதிற்குப் புத்தி புகட்டுவதாகக் கூறுகிறார். ஐயா அருணகிரி அப்பா உன்னைப் போல் மெய்யாகிய ஓர் சொல் விளம்பினர் யார் என்று தாயுமானசுவாமிகளாலே பாராட்டப் பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் ''முருகா என நின்றேத்தாத மூடரிடம் போய் மதிமயங்கி விட்டேனென்கிறார். இராமலிங்கமுனிவர் இன்பம் இன்பம் என என்றென்றும் தித்திக்கும் சிற்றின்பத்தினும் பன்மடங்கு பெருமை உள்ளது பேரின்பம். இத்தகைய பேரின்பநிலையை அடைய வேண்டுமானல் ஈசனின் திருநாமத்தை நின்றும் இருந்தும் கிடந்தும் பேசவேண்டும். நாளெல்லாம் பேசுகின்ற நாக்கு நம்பனின் நாமத்தை நாள்தோறும் நவின்றால் நலம் பலவும் அருள்வான் நம் ஈசன்.

சிறப்பும் செல்வமும் கல்வியும் ஒழுக்கமும் சீரும் பெருக வேண்டுமானல் வேண்டத் தக்க தறிவோனுகியவனும் வேண்ட முழுதும் தருவோனுமாகிய நிமலனின் திரு நாமத்தை ஓதி உய்தி பெறுவோமாக.

தேனினு மினியது சிவநாமம்
அமிழ்தினு மினியது அரன்நாமம்.

---

# சித்த மருத்துவம்

(டாக்டர்: ச. ஆறுமுகநாதன் — கல்லிடைகுறிச்சி)

## தமிழ்த்தாய் வாழ்த்து

தென்பாண்டி நாட்டில் திருநிறைந்த பொதிகை மலை
தன்னில் பிறந்தே தரணிக்கெல்லாம் மகிழ் வூட்டும்
கன்னல் தமிழே! கவின் நிறைந்த திருமொழியே!
அன்னையே எம்மை ஆராட்டி சீராட்டி
வளர்த்த பெருந்தாயே! வடிவுடைய கோமகளே!
தளரா உடற்கட்டை தான்பெற்று எங்களுக்கும்
நோயணுகா விதிகூறி நூறுபயன் நூருண்டு
காயம் கெடாதிருக்கும் கற்பங்கள் காட்டுவித்து
ஓயாதுழைத்து உலகமெலாம் வாழ்ந்திடுக!
நேயக் கரம்நீட்டி நெஞ்சிலே அன்பு வைத்து
கடல் கடந்து சென்றும் கவினுறவே நீ வளர்ந்தும்
தடந்தோளில் இலக்கிய தண்ணளிகள் பூண்டேதான்
நின்ற நிலைகண்ட நிறைவில்லா நெஞ்சினர்கள்
கொன்றழிக்க எண்ணும் கொடுமை தனைப் பொறுத்து
அன்றுமுதல் இன்றும், அறம் பொருள் இன்பம் வீட்டை
நன்ருகப் போதித்து நடுநிலை வழுவாமல்
கல்தோன்றி மண்தோன்ரு காலத்தின் முன்தோன்றி,
எல்லா மொழிகட்கும் இனியதுவாய் மூத்ததுவாய்
நில்லா இளமை நிறைந்ததுவாய் வாழுகின்ற
சொல்லில் உயர்ந்த சொற்கொண்ட தேன்மொழியே!
இறவா இலக்கியங்கள் இயற்றிக் கொடுத்திட்ட

அறவோரைப் போற்றி அவர்வழியில் யாமும்
முதுமைக்கும் இளமைக்கும் முத்திரையாய் விளங்கும்
புதுமை இலக்கியங்கள் பொன்னுன காப்பியங்கள்
அதிகம் படைத்து அன்னைக்கு அணிசெய்து
உதயக் கதிர்போல ஒளிசெய்து நின்றிடுக!
இதயத்தே நற்கருணை எந்நாளும் பொங்கிடுக!
மதியம்போல் குளிர்ந்த மனவெழுச்சி பெற்றிடுக!
முன்னின்று ஊக்கி முத்தமிழ் இலக்கியங்கள்
பன்னூறு ஆக்கப் பலம்தந்து பைந்தமிழர்
எண்ணத்தே புகுந்து இனிதே விளையாடி
வண்ண மருத்துவநூல் வடித்திட்ட சித்தர்கள் போல்
கண்ணைக் கருத்தை கவரும் அழியாத
எண்ணத்தை சொல்லாக்கி எழிலான நூலாக்கும்
வாய்ப்பை வரத்தை வந்துமே தந்தருளி
நோய்கள் நீக்கும் நுட்பத்தை ஊட்டுவித்து
முன்னே முருகனருள் பெற்ற குறுமுனி போல்
என்னையும் பெறச்செய்து இறப்பிறப்பை வென்றிடும்நூல்
தன்னை இயற்றிடுக தயைபுரிந்து அருள்செய்க!
அன்னையே உன்னை அடிபணிந்து வேண்டுகிறேன்.

## செந்தமிழ் நாடும் சித்த மருத்துவமும்

தணல்நிலை நீங்கி தட்பநிலை ஓங்கி உயிரினம் முதன் முதலாகத் தோன்றியது தமிழ்நிலம். இந்தத் திருநிலத்தி லேதான் மக்களினம் முதலாகத் தோன்றிப் படிப்படியாக நாகரிகம் பெற்று, உலகத்தின் முதன் மொழியாகிய பைந் தமிழ் மொழியைக் கண்டு வளர்ச்சியுற்று நோய் நீக்கும் தமிழ்ச் சித்த மருத்துவ முறையையும், உலகத்தின் முதல் மருத்துவ முறையாகக் கண்டனர்.

உலகத்தின் முதல் மக்களினம் தோன்றியதும், முதன் மொழி தோன்றியதும், முதல் மருத்துவம் ஏற்பட்டதும் தென்னகத்திலேயாகும். இந்தப் பொன்னகத்தில் தோன் றிய மக்கள் தமிழ் மக்கள். அவர்கள் கண்ட மொழி தமிழ் மொழி. அவர்கள் கையாண்ட மருத்துவம் சித்த மருத்துவம். இந்தச் சித்த மருந்துகள் மூலிகை மற்றும் உலோக - இரச வர்க்கங்களால் செய்யப்படுபவையாகும்.

-தொடரும்.

'ATHMAJOTHI' Registered at the G.P.O. as a Newspaper. M.L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

17 ஆவது ஆண்டு 7வது சோதி இன்று உங்கள்கையில் கிடைக்கின்றது. சந்தா நேயர்களின் உதவியினாலேயே சோதி பதினாறு ஆண்டுகளைக் கடந்துள்ளது. சோதிக் குழந்தை உங்கள் வீட்டைத் தேடிவரும்போது என்ன பரிசு அளிக்கப் போகின்றீர்கள். உங்கள் சந்தாவை உடனே அனுப்பி வைத்தல்தான் நீங்கள் கொடுக்கும் பரிசாகும். என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக.

இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம்–9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்விடமும் அறியத் தருவீர்களாக.

**ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி. (இலங்கை)**

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3.00 |
| 4. | தீங்கனிச் சோலை | 2.50 |
| 5. | பாப்பாவிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | .30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .30 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 12. | கந்தரனுபூதி | .25 |
| 13. | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |

தபாற் செலவு தனி

அச்சிடுவோர்:- ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்
வெளியிட்டதேதி:- 14-5-65.